# விட்டு விடுகிறேன்! - ஏன் உங்களால் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடிவதில்லை - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: நீங்கள் இதுவரைக்கும் எப்போதாவது சொல்லியிருக்கிறீர்களா, "என்னால முடியாது! என்னால கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது?

**டாக்டர் வேயின் பார்பர்:**

ஒருநாள் காலையில் நான் எழுந்ததும், ஜான், உங்ககிட்ட உண்மைய சொல்ல விரும்புகிறேன், அன்னைக்கு எனக்கு கிறிஸ்தவன் என்ற உணர்வே இல்லை. யாராக இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் இல்லாமல் இருந்தேன். அதாவது, அந்த உணர்வோடு தான் நான் கண்விழித்தேன். ஒரு பழங்காலத்து பையன் சொன்னது ஞாபகமிருக்குதா, "தேவனே, நா பேராசப்படல. எனக்கு இச்சையான சிந்தனைகள் இல்லை. னா பொய் சொன்னது கிடையாது, யாரையும் நா ஏமாத்துல, ஆனா இப்ப என்னோட படுக்கையில் இருந்து நா எழுந்திருக்க போகிறேன்."

தேவன்  என்னிடம் செய்யும்படி சொன்ன காரியத்தை செய்ய எனக்கு திறமை இல்லை. இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால் வாழ

முடியாது. அப்ப எனக்குள் வாழ்கிறவர் என்னை பெலப்படுத்துகிறவராக இருக்கிறார், அவர் என்னிடம் இருந்து எதிர்பார்க்கிற காரியங்களை நான் செய்யும்படி எனக்கு சத்துவத்தை அளிக்கிறார்.

இப்ப, என்னில் புதிய சுபாவம் இருக்கிறது, நான் கிறிஸ்துவின் சுபாவத்திற்கு பங்குள்ளவனாக இருக்கிறேன். இருந்தாலும் நான் மாம்சத்தோடு போராடி மேற்கொள்ள வேண்டியிருக்கு இந்த யுத்தம் அனைத்தும் கிறிஸ்துவை நமது இருதயத்தில் நாம் ஏற்றுகொண்ட நிமிடத்தில் இருந்து துவங்குகிறது.

**அறிவிப்பாளர்:** இன்றைய எனது விருந்தினர் ஒரு கருத்தரங்கு பேச்சாளர், நூலாசிரியரும் போதகருமான Dr. வேயின் பார்பர், வுட்லாந்து பார்க் பாப்டிஸ்ட் திருச்சபையின் போதகராக இருக்கிறார் சாடாநோகா, டெநீசீ

**பார்பர்:** அவர் நமக்குள் வாசம்பண்ணி நம்மிடம் இருந்து நாம் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யும்படி சத்துவமளிக்கிறார். அதுதான் நற்செய்தியாக இருக்கிறது. அதுதான் சுவிசேஷத்தின் அழகு தன்மையாகவும் இருக்கிறது. அது இரட்சிப்போடு நின்று விடுவதில்லை. கிறிஸ்து நமக்குள் வந்து வாசம்பண்ண துவங்குகிறார். அவர்தான் நமது நித்திய ஜீவன். அவர்தான் நமது ஜீவன் அதைதான் ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்க எப்படி அவரை

ஏற்றுகொண்டீர்களோ அப்படியே அதில் நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவரை நம்பிடுங்கள்.

**அறிவிப்பாளர்**: ஜான் அன்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். உங்களை இன்றைக்கு பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் தான் ஜான் அன்கேர்பெர்க், இன்று அருமையான நபர் நம்மத்தியில் இருக்கிறார். அவருடைய பெயர் Dr. வேயின் பார்பர். சிறந்த நபர், என்று நினைக்கிறேன், தங்கள் வாழ்நாள் முழுவதும் சபையின் சூழலில் வளர்ந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் அதிகமாக உதவிடுவார், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதை பற்றியதான பிரசங்கங்களை கேட்டிருக்கிறார்கள் அந்த மாதிரி வாழவேண்டும் என்று அதிகமாக முயற்சித்தும் அதில் தோல்வியை சந்தித்தவர்களாக இருக்கின்றனர். அதினால் சோர்ந்துபோயிருக்கிறார்கள், ஏமாற்றத்தோடு காணப்படுகிறார்கள். ஒருவேளை நான் உங்களை பற்றி சொல்லிக்கொண்டு இருக்கலாம். சிலர் இது எனக்கு ஒத்துவராது என்ற தீர்மானத்திற்கே வந்துவிட்டனர். அது எனக்கு பொருந்தாது. என்னால முடியாது, சரியா. இன்றைய நிகழ்ச்சியை நீங்கள் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன், ஏன்னா இதை பற்றி தான் இன்றைக்கு நாம் பார்க்க இருக்கிறோம். சரி, வேயின்,

இதை இப்படி ஆரம்பித்திடலாமா. கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முயற்சித்து நீங்களே பல ஆண்டுகளாக முயற்சித்து சோர்ந்துபோனதாக சொல்லியிருக்கீங்க. அதுவந்து ஜிக்சா புதிரில் ஒரு பாகம் விடுபட்ட நிலையில் அதை ஒன்று சேர்க்க முயலுவதற்கு ஒப்பாக இருக்கிறது என்றிருக்கிறீர்கள். அதிலிருந்து இன்றைக்கு துவங்கிடலாமா.

**பார்பர்:** சரி, அதாவது, ஜிக்சா பசில்ல எல்லாத்தையும் ஒன்று சேர்க்கும்போது ஒரு பீஸ் அதுல இல்லைன்னா, படம் தெளிவாக கிடைக்காது. அதுதான் என்னோடு கிறிஸ்தவ வாழ்வின் கதையாக இருக்கிறது.  நான் சிறுவனாக இருந்த போது விடுமுறை நாட்களில் அப்படி செய்திருக்கிறோம், ஆயிரக்கணக்காக இருக்கும் துண்டுகளில் சிலவற்றை ஒழித்து வைத்திடுவோம். அது, அதாவது எல்லாத்தையும் சரியா வைக்க முயற்சித்து போராடும்போது கடைசி துண்டு கிடைக்கலைன்னா ரொம்ப எரிச்சல் உண்டாகும். என்னிடத்தில் இல்லாமல் இருந்த துண்டு எதுன்னு கேட்டீங்கன்னா, அதாவது நான் இரட்சிக்கப்பட்டிருக்கேன்னு நினைச்சேன், அந்த நேரத்துல அதுவே எனக்கு பெரிய விஷயமா இருந்துச்சு. அதை நானே பெரிது படுத்திகொண்டேன், எல்லாருடைய தேவைகளையும் பூர்த்தி செய்ய நினைப்பேன், ஏதோ சரி என்று பார்த்து அதைதான் செய்ய முயலுவேன், ஆனா என்னால எதையும் முழுமையா செய்ய முடியாதுன்றத புரிஞ்சுகிட்டேன். என்கிட்ட இல்லாம போன விஷயம் இதுதான் கிறிஸ்தவர்களின் பொறுப்பு என்னவென்றால் அவர்கள்

அவருடைய தரத்திற்கு ஏற்றார் போல இருக்க கற்றுக்கொள்ள வேண்டும், ஏன்னா இப்ப அவர்தான் நமக்குள் வசிக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, இது உண்மையில் ரொம்ப வியர்த்தமா இருக்குந்தான் இதை பற்றி நேயர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். உங்க வீட்டுலையே ஒரு உதாரணம் வைத்திருக்கிறார்கள் உங்க மகள், ஆமா நீங்க உங்க மகன் மற்றும் மகள். நீங்க தான் அவங்கள காலையில ஸ்கூலுக்கு கூட்டீட்டு போய் விடுவீங்கள்ள, ஒரு நாள் காலையில என்ன நடந்ததுன்னு சொல்லுங்க.

**பார்பர்:** சரி, ஒரு நாள் காலையில, எப்பவும்போல ஸ்டேப்னி தாமதமா கிளன்பினா மேலும் அவளோட கூந்தல் எப்பவும் சரியா இருக்கனுன்றதுல கவனமா இருப்பா. அதை திரும்ப திரும்ப வாரீட்டே தலைய வாரீட்டே இருப்பா. நா பொறுமை இழந்து மேல போய் கூப்பிடுவேன்,"ச்டேபிணி, இன்னும் பத்து நிமிஷத்துல நாம கிளன்பியே ஆகணும் என்பேன்." கேட்குது இருங்க, டேடி என்பாள். அடுத்து, ஸ்டீபன் ரொம்ப செல்லமான குழந்தை அவன். ஸ்டேப்னி நேருக்கு நேராக பேசிடுவா, படபடபடன்னு இருப்பா. சரின்னு பேசாம போவேன், சரியா. இப்ப நானும் ஏ பையனும் வந்து கார்ல உட்கார்ந்திருப்போம். நாங்க இரண்டுபேரும் ஏ பொண்ணுக்காக தான் காத்துட்டு இருக்கோன்னு இரண்டு பேருக்கும் நல்லா தெரியும். ஆனா ஒருநாள் காலையில அவ கிளன்பி வெளிய வந்ததும் பின்பக்கம் தாண்டி

போகும்போது சறுக்கி விழுந்துட்டா. அவ படிச்சது ஒரு கிறிஸ்டியன் ஸ்கூல்ள அங்க சீருடையோட காலுறைகளும் குடுப்பாங்க, விழுந்ததுல அவளோட காலுறை கிழிஞ்சிடுச்சு முட்டிலையும் அடிபட்டிருச்சு. இப்ப திரும்ப போய் ட்ரெஸ் மாத்திறதுக்கு நேரமாயிடும். அதனால கார்ல ஏறி உட்கார்ந்து கதவை டமாலுன்னு சாத்தினா, அவ கார்ல ஏறதுக்கு முன்னால நா ஏ பையங்கிட்ட சொன்னே, என்ன சொன்ன தெரியுமா, “ஸ்டீவன், இன்றைக்கு நல்ல நாளா இருக்கபோகுதுன்னு சொன்னே.” அதுக்கு பிறகு தா அவ கார்ல ஏறினா. எப்பவும் எதையாவது சொல்லிகிட்டே இருப்பா. அவ எங்கிட்ட சொன்னா, “டாடி, உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்.” அதுக்கு நா சரி, ஸ்டேப்நி , என்ன விஷயம் என்றேன்.” உங்களால கிறிஸ்தவ வாழ்க்கை வாழவே முடியாது. நீங்க என்ன பிரசங்கித்தாலும் சரி, டாடி, உங்களால கிறிஸ்தவ வாழ்க்கையை வாழவே முடியாது. அதற்கு நா என்னை ஊக்குவித்ததற்காக நன்றி என்றேன். இன்றைக்கு வேறு யாரையாவது ஊக்குவிக்க முயல்கிறேன் என்றேன்.” ஆனா ஸ்கூலுக்கு போற வழியில் ஒரு விஷயம் புலப்பட்டது அவ சொன்னது சரிதான். அவ கார விட்டு இறங்கிறதுக்கு முன்னால அவகிட்ட நா சொன்னே, “ஸ்டேப்னி, கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால வாழ முடியாதுன்றத எனக்கு நினைப்பூட்டியதற்காக உனக்கு நன்றி, என்னால முடியாதவைகளை நான் செய்திடும்படி கிறிஸ்து எனக்குள்ளாக வந்து வாசம் பண்ணி செயல்படுகிறார்.”

**ஆன்கர்பெர்க்:** இப்ப, ஸ்டேப்னிய மாதிரி சொல்லுகிற நிறைய விசுவாசிகள் இருக்கிறார்கள், அவங்க சொல்வாங்க, "வேயின், நா என்ன செய்யணுன்னு சொல்ற விதமான பல பிரசங்கங்களை கேட்டிருக்கிறேன். நா முயற்சி செய்தாலும் என்னால முடியல. வருத்தமான நிலையில தோல்வியடைந்தேன். என்னிடம் விடுபட்டிருக்கும் அந்த துண்டு என்னது?

**பார்பர்:** ஆமா, அந்த துண்டு தான் எனக்குள் இருக்கும் கிறிஸ்து. உங்களை நா பப்பாவுக்கு அறிமுகபடுத்தி வைக்கிறேன். நா அவரை பப்பான்னு கூப்பிடுவேன்.

**ஆன்கர்பெர்க்:** உங்களுக்கு வேட்டையாடுவதும் மீன் பிடிப்பதும் பிடிக்கும்.

**பார்பர்:** அவரை நான் பிரபலமாக்கிடுவேன். பப்பா, சிலுவை என்பது முதல்ல ஒன்றுமே இல்லை. அதாவது ஒரு நபர் தன்னுடைய கிரியைகளை செய்து இரட்சிப்பை பெற முடியும் என்ற நிலை இல்லை. ஒருவன் கிருபையினாலே விசுவாசத்தை கொண்டு இரட்சிக்கபடுகிறான். மனிதன் செய்ய கூட எந்த கிரியைக்கும் அதில் இடம் இல்லை. பப்பா தேவன் வைத்திற்கும் நிலையை அடைய எந்த அளவும் அடைய முடியாது. சரி, அவன் இரட்சிக்கப்பட்டதும், என்ன நடக்குது தெரியுமா? கிறிஸ்து அவனுக்குள் வந்து வாசம் பண்ண துவங்குகிறார். இப்ப பப்பானால எல்லா காரியத்தையும் செய்ய

முடியும், அது பப்பானால நடக்கிற காரியம் அல்ல, அவருக்குள் இருக்கிற ஜீவனால் அந்த காரியம் நடக்கிறது. எப்படி இருந்தாலும், பப்பா தானே முயன்று எதையாகிலும் செய்யலாம் என்று யோசித்தால், அவர் அதே பப்பா மாதிரிதான் இருப்பார். அதாவது சிலுவையின் இரண்டு பக்கமும் நியாயப்பிரமாணம் ஒரே அளவில்தான் இருக்கிறது. நியாயப்பிரமாணம் என்பது தேவன் நமது வாழ்வில் அவருடைய குணாதிசயம் வெளிப்பட வேண்டும் என்கிறார், நம்மில் ஒருவராலும் அதை நிறைவேற்ற முடியாது. அதனால் தான் கிறிஸ்து நமக்குள் வந்து வாசம் பண்ணுகிறார்.

**ஆன்கர்பெர்க்:** நீங்க சொல்கிற காரியத்திற்கு ஒத்த வசனங்களை எங்களுக்கு சொல்றீங்களா.

**பார்பர்:** ரோமர் ஆறாம் அதிகாரம் மற்ற எல்லாவற்றையும் விட தெளிவாக இருக்கிறதென்று நினைக்கிறேன்,

**ஆன்கர்பெர்க்:** இதை பத்தி சொல்லுங்க.

**பார்பர்:** அவர் துவங்கும் போது இப்படியாக சொல்லுகிறார், “நாம் என்ன சொல்லுவோம்? நாம் தொடர்ந்து பாவம் செய்திடலாமா? இதுல சுவாரஸ்யமான விஷயம் என்னன்னா, சரியான விதத்தில் பாவத்தை பற்றி விவரித்து இருக்கிறார். இப்ப, அதை விளக்கமாக சொல்லுகிறேன். எனக்கு முன்னால ஒரு கொத்து கப்புகள் இருக்குன்னு வைச்சுக்கோங்க  அதுல ஒரு கப்ப எடுங்கன்னு சொல்றே,

ஆனா குறிப்பா இதை தான் எடுக்கனுன்னு நா சொல்லலா, எந்த கப்ப வேணுன்னாலும் நீங்க எடுக்க முடியும். ஆனா ஒரு குறிப்பை அதில நான் உங்களுக்கு சொன்னா, இந்த கப்பை தான் எடுக்கவேண்டும் என்று குறிப்பாக கூறிடுவேன். இதுதான் குறிப்பாக சொல்லப்படுகிற விஷயம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பாவம் என்ற வார்த்தைக்கு முன்பு சரியான பதத்தை அவர் பயன்படுத்துகிறார். வசனம் பதினாலில் இருந்து அதை பார்க்க முடியும். பிறகு அதை மாற்றுகிறார், அதை விட்டுவிட்டு, மறுபடியும் அதை பற்றி சொல்ல துவங்குகிறார்.

அவர் இங்கு எதை பற்றி சொல்லுகிறார்? தொடர்ந்து பாவத்தில் இருப்பதை பற்றி சொல்லுகிறார். அது குறிப்பிட்ட பாவம் என்றில்லை. அவர் பாவத்தை தன்மையை பற்றி சொல்லிக்கொண்டு இருக்கிறார், யோவான் அதை ஒன்று யோவானில் நியாயப்பிரமாணத்திற்கு எதிரானது என்கிறார். எல்லா பாவமும் பிரமாணத்திற்கு எதிரானது தான். அப்ப என்னுடைய சொந்த இஷ்டப்பட்டு நான் நடக்கிறேன்னு சொன்னா, நா யாருடைய பேச்சையும் கேட்க்காம தான் இருப்பேன். நா என்னோட சொந்த பெலத்துல கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முயன்றிடுவேன். அப்ப தா நாம தொற்றுபோகிறோம். அவர் சொல்கிறார், “கிருபை பெருகும்படிக்கு நாம் நமது சுய எண்ணத்தின்படி இதை தொடர்ந்து செய்துகொண்டே இருப்போமா? தொடர்ந்து சொல்லுகிறார், அப்படி இருக்க வேண்டாம்! இந்த பகுதி எனக்கு

பிடித்திற்குக்கிறது, ரோமரில் இந்த வார்த்தைகள் பல முறை சொல்லப்படுகிறது. அது எப்படி இருக்குன்னு ஏ பையன், "டாடி, நா உங்க கால்ப் கிளப்ஸ்ச எடுத்துக்கலாமா? என்றதற்கு அது வேண்டாம். நீ போன முறை என்னோடத வாங்கி இன்னும் திரும்ப தரவே இல்லை என்பது போல இருக்கிறது. பாவத்திற்கு மரித்த நாம் இன்னும் எப்படி பாவத்திலேயே இருக்க முடியும்? இப்ப உங்களுக்கு புரியுதா. அந்த வாழ்க்கை முறைக்கு நாம் மரித்திருக்கிறோம், நம்முடைய சுயம், நம் இஷ்டப்படி வாழ்வதற்கு மரித்துவிட்டோம். அல்லது கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்திற்கு ஏதுவான ஞானஸ்நானம் பெற்றிருப்பது நீங்கள் அறியாதிருக்கிறீர்களா? அதற்கு பிறகு, வசனம் நான்கில், அதை பாருங்கள், "ஆதலால்" ஆதலால் என்ற வார்த்தை எனக்கு ரொம்ப பிடிக்கும், ஏன்னா எதற்காக அங்கு அப்படி சொல்லப்படுகிறது? அவர் சொல்கிறார், "ஆதலால், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலேகிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

அதனால் இந்த வாழ்க்கை, புதிதான ஜீவன், புதிய என்பதற்கு இரண்டு வார்த்தைகள் இருக்கிறது. நியோஸ் என்ற வார்த்தை. வேயின் இன்னொரு கார் வாங்கினார், ஆனா அது அவருக்கு புதிதாக இருந்தது,

அது ஒரு கார்தான். கேயிநோஸ் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தரமான ஒன்று, இதுவரை கண்டிராத மாறுபட்ட ஒன்றாகும். வேயின் போய் ஒரு விண்கலத்தை வாங்கியிருக்கிறார். இது கொஞ்சம் வித்தியாசமானதாக தெரியும், அதுதான் ஜீவியத்தின் புதிதான காரியம். அதனால் தான் ரோமர் 12ல் அவர் இப்படியாக சொல்லுகிறார், அதாவது, அவர் இதை பற்றி சொல்லும்போது சொல்லுகிறார், "உங்கள் சரீரங்களை ஜீவா பலியாக ஒப்புக்கொடுங்கள், இதுதான் நீங்கள் செய்யத்தகுங்க புத்தியுள்ள ஆராதனை." அப்ப இது ஒரு புதுவிதமான ஜீவியமாக இருக்கிறது. இதன் திறவுகோல் காரியம் என்னவென்றால் இந்த ஜீவனை வாழ கிறிஸ்து நமக்குள் இருந்து உதவிடுவார். கலாத்தியரில் இதை பற்றி சொல்லப்படுகிறது என நினைக்கிறேன், அதையும் பார்ப்பது பொருந்தும் என நினைக்கிறேன்,.

**ஆன்கர்பெர்க்:** சரி, இப்ப நீங்க சொன்ன காரியத்தை பற்றி இரண்டு கேள்விகள். ஒன்று, ஜனங்கள் விரும்புகிறது என்னவென்றால், நான் கிறிஸ்துவுக்குள் மரிப்பது என்றால் என்ன? அது எப்போது நடக்கும்? அது எப்படி நடக்கும்? ஞானஸ்நானம் என்றால் என்ன, தண்ணீரில் மூழ்கி எழும்புவதை பற்றி சொல்கிறீர்களா, அல்லது நீங்க சொல்ல வருகிற காரியம் என்ன?

**பார்பர்:** ஆல்ரைட், முதலாவதாக, நீங்க கிறிஸ்துவை ஏற்றுகொள்ளும்போது மரிக்கும் அனுபவம் உண்டாகிறது. நீங்க முன்பு

போல இருப்பது கிடையாது. பழைய வாழ்க்கை முறைக்கு நீங்க மரித்திருக்கிரீர்கள். இப்ப நீங்க புதிதான ஒரு வாழ்விற்குள் பிரவேசிக்கிறீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** அது நமக்கு தெரியாமல்  இருக்க வாய்ப்புண்டா?

**பார்பர்:** நமக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பிருக்கிறது. இதன் திறவுகோல் இதுதான், நாம் தேவனுடைய வார்த்தையை புரிந்துகொள்ளும்படியாக நம்முடைய மனதை புதிதாகக கற்றுக்கொள்ள வேண்டும். ஆனா சத்தியத்தை அறிந்துகொள்ள நாம் கற்றுகொள்ளும்போது, கிறிஸ்து எதற்காக வந்து நமக்குள் வாசம் செய்கிறார் என்பதை விளங்கிகொள்வோம்.

**ஆன்கர்பெர்க்:** தேவன் நம்மிடம் இதைதான் சொல்கிறார், கிறிஸ்துவை நாம் ஏற்றுகொண்ட உடனே, உங்களுக்குள் ஒரு மாற்றம் நிகழ்கிறது.

**பார்பர்:** நிச்சயமாக. நீங்க இப்ப புதிய சிருஷ்டியாக இருக்கிறீர்கள்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இந்த விஷயம் எனக்கு பிடித்திருக்கிறது, அது டிரைவ் வேல இருக்கிற புதிய கார் இல்ல,அது ஒரு விண்கப்பல். இங்க முற்றிலும் மாறுபட்ட ஒன்று இருக்கிறது. ஆனா ஜனங்க கேட்க்கிறாங்க, “வேயின், தேவன் என்னை கிறிஸ்துவுக்குள் முற்றிலும்

வித்தியாசமான நபராக மாற்றியிருந்தால், நா எப்படி அதை உணராம இருக்கேன்?

**பார்பர்:** இப்ப, இதுதான் பிரச்சனை என்று நினைக்கிறேன். நம்முடைய மாம்சத்தின் வஞ்சக என்னத்தை நாம் புரிந்துகொள்வதில்லை. உலக கருத்துக்களை நமது கிறிஸ்தவ வாழ்வில் அப்பியாசித்திட நாம் முயலுகிறோம். நா கல்லூரியில் பந்து விளையாடுவேன், லாக்கர் ரூம்ல இருக்கும் சுவற்றில் படிந்த அடையாளங்கள் எனக்கு நினைவிருக்கிறது, “போக போக கடினமாக மாறும்போது, கடின நிலை தொடர்ந்துகொண்டே இருக்கும்.” பார்பர், அடுத்த பகுதிக்கு போ” என்னால முடியல. இன்னும் பத்து இருக்குது.” அதாவது, திக்குமுக்காடிடும் நிலை. உன்னால முடியும், தம்பி. அந்த மனப்பான்மையை வளர்த்திட முயலுவோம், தேவன் எதிர்பார்க்கிற ஒன்றை எப்படியாவது செய்து முடித்திடவேண்டும் என்ற எண்ணம் தான், நமது கிறிஸ்தவ வாழ்வில் நுழைந்திருக்கிறது. இந்த என்னத்தினாலதான் நாம் விழுந்துவிடுகிறோம். என்னுடைய கிரியைகளினால் இருக்குமென்றால், அப்ப நா என்னுடைய திறமையை சார்ந்திடுவேனே தவிர அவருடைய திறனை சார்ந்திட மாட்டேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், அப்ப ஞானஸ்நானம். தத்ரூபமான செயல் பற்றி நாம் பேசிகொண்டிருக்கிறோமா அல்லது என்ன நடந்தது என்பதை அறிந்திட இதை உதாரணமாக வைத்து பார்க்கின்றோமா?

**பார்பர்:** இல்ல, என்ன நடந்து என்பதற்கான உதாரணம். ஒரு கிண்ணம் இருக்கு - சிகப்பு சாயம்; அது வெளிப்படையா தெரிகிற ஒன்று - ஒரு வெள்ளை துணியை எடுத்து அந்த சிகப்பு சாயத்தில் தோய்க்கிறேன், அதுல முக்கி எடுக்கிறேன் என்று வைத்துகொள்ளுங்கள். என்னுடைய நண்பர்களில் பெரும்பாலானோர் சொல்வார்கள், இல்ல,இல, இல்ல, இதற்கு அடையாலப்படுத்தப்படுதல் என்று அர்த்தம். சரி, இருக்கட்டும், ஆனா கிரேக்க மேதைகள், ஒரு மனிதன் மூழ்கி எழும்புவதற்கு இந்த வார்த்தையை தான் பயன்படுவதாக காணப்படுகிறது, இதற்கு அந்த அர்த்தம் தான் என நினைக்கிறேன். ஆனா நீங்க அதை அதற்குள் தோய்க்கும்போது, அந்த துணிக்கு ஒரு மாற்றம் உண்டாகிறது. அந்த துணி இப்ப வெள்ளை நிறத்தில் இல்லை. அது சாயத்தில் மூழ்கி இருப்பது மட்டுமல்ல, அந்த சாயமும் துணியில் படிந்திருக்கிறது. இரட்சிப்பின் போது இந்த மாதிரியான நிகழ்வுதான் நமக்கும் நடக்கிறது. நாம் கிறிஸ்துவின் சாயலில் அடக்கம் பண்ணப்படுகிறோம், மேலும் புதிதான ஜீவனுடையவர்களாக எழுந்திருக்கிறோம். அவர் சிலுவையில் மறித்தது போல, நாமும் அவரோடு மறிக்கிறோம். மேலும் நாம் அவருக்கு முன்பாக பணிந்து அவரை நமது இருதயத்தில் ஏற்றுகொள்ளும்போது இந்த சம்பவம் நிகழ்கிறது. நாம் புதிய சிருஷ்டியாக மாறுகிறோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம். இது ஒரு அருமையான காரியம் தேவ வசனமும் இதை தான் சொல்லுகிறது, இருந்தாலும் ஜனங்கள் இதை புரிந்துகொள்ள பெரிதும் போராடுகிறார்கள் அதை விசுவாசித்து பிடித்துக்கொள்ள இடறுகிறார்கள். ஆகவே நாம் திரும்ப வந்ததும், உங்களிடம் ஒரு கேள்வி கேட்க்க இருக்கிறேன்: இதெல்லாம் உண்மைதானா, அப்படின்னா எனக்கு ஏற்றுகொள்ள கடினமாக இருப்பது ஏன்? என்னுடைய மாம்சம் என்று வேதம் எதை குறிக்கிறது? இதை நீங்கள் விளக்கி சொல்லி அதற்கான வசனங்களையும் தரும்படி விரும்புகிறேன், ஏன்னா அவங்க ஒருவேளை இது இவர்களுடைய கட்டுக்கதை என்று சொல்லீட்டாங்கன்னா. தேவன் இதைதான் சொல்லியிருக்கிறார் என்று தேவனுடைய வசனத்தில் இருந்து அவர்களுக்கு நான் எடுத்து சொல்ல விரும்புகிறேன். இதுதான் மற்ற எல்லாவற்றிற்கும் ஒரு திறவுகோலாக இருக்கிறது. நேயர்களே, தொடர்ந்து இணைந்திருங்கள், இது உங்களுக்கு ரொம்ப பிடிக்கும். மீண்டும் உங்களை சந்திக்கிறோம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக, இந்த பிரச்சனையை பற்றிதான் பார்த்துகொண்டிருக்கிறோம், நேயர்களே. நீங்க ஒரு கிறிஸ்தவராக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த

இரட்சகராக ஏற்றுகொள்ள, அவர் உங்கள் வாழ்வில் பிரவேசிக்கிறார், இருந்தாலும் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் போராட்டத்தில் நீங்கள் துவண்டு போய் நிற்கிறீர்கள். தேவன் உங்களுக்கு என்ன நடக்கிறது என்று சொல்கிறார் என்பதை பார்த்துகொண்டிருக்கிறோம், இந்த போராட்டம் எதினால் வந்தது, ஏன் எப்போதும் போராட்டங்கள் தேவன் நமக்கு வாக்களித்திருக்கிற ஜெயம் என்ன? அதை எப்படி அடைவது போன்றவை, சரியா? நடைமுறை காரியங்களாகும். அப்படி பார்த்தா வேயின் சொன்னதற்கு மதிப்பெண்கள் இல்லை. வேயின், மறுபடியும் சொல்லுங்கள். கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது ஏன் கடினமான ஒன்றாக இருக்கிறது?

**பார்பர்:** ஓகே, இப்ப, ஐந்தாவது வசனத்தை பார்க்கலாமா. ரோமர் ஆறாம் அதிகாரத்தில் இருக்கிறோம். வசனம் நான்கை முதலில் பார்த்தோம். வசனம் 5 கூறுகிறது, “அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் நாம் இணைக்கப்பட்டிருப்போம். எனக்கு இது பிடித்திருக்கிறது. இணைக்கப்படுதல் என்பது கூட்டு வார்த்தை. ஒரு வார்த்தையை விவரிக்க விளக்க சொற்கள் பலவிதங்களில் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. உடன் என்ற வார்த்தைக்கு பலவிதமான சொற்கள் பயன்படுத்தப்படுகிறது.

உடன் என்பதற்கு நம்மிடம் ஒரு வார்த்தைதான் இருக்கு அவங்களுக்கு இரண்டு வார்த்தைகள். சண் என்ற வார்த்தை, மற்றும் மீடா என்ற வார்த்தை. மீடா என்பது தொடர்புடைய என்ற பதத்திற்கு பயன்படுகிறது. சண் என்ற வார்த்தை ஐக்கியம் என்பதை குறிக்கிறது, ஒருவரும் பிரிக்க முடியாத ஐக்கியம். இங்குள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. இது எப்படிபட்டது என்றால், எனக்கு பிஸ்கட் பிடிக்கும். எனக்கு பிஸ்கட் ரொம்ப பிடிக்கும். அதுக்கு என்னால ஒன்னும் செய்ய முடியாது. கிழக்கு பகுதியில் தான் பல வருடங்களாக இருந்தோம், ஒன்பது வருடங்கள் அல்புகுவர்க்யூ, அங்க நிறைய டார்ட்டில்லாஸ் இருக்கு. அது, நல்லா இருக்கும். உண்மையா நல்லா இருக்கும், ஆனா இருந்தாலும் பழைய கேத்தீத் தெற்கு பிஸ்கட்டுகளை போல இருக்காது.

இப்ப நா சில பிஸ்கட்கள் செய்கிறோம் என்று வைத்துகொள்வோம், நம்மகிட்ட ஒரு கிண்ணம் இருக்கிறது. அந்த கிண்ணத்துல எல்லா பொருட்களையும் போடுவோம். உடன் என்ற வார்த்தைக்கு கிரேக்க பதத்தில் என்ன வார்த்தை பயன்படுத்தலாம் என்று சொல்லமுடியுமா? மீடா என்ற வார்த்தையை பயன்படுத்தலாம், ஏன்னா அதுல இன்னும் சேர்த்துக்கொண்டே இருக்கலாம்; நீங்க என்ன செய்கிறீர்கள் என்று உங்களுக்கு தெரிந்தால் நீங்கள் தொடர்ந்து போய்கொண்டே இருக்கலாம். சிலர் அதுல கொஞ்சம் கொழுப்பு சேர்க்கும்படி சொல்வாங்க, ஆனா அதை முடிக்கிறதுக்குள் பலவிதமான கருத்துக்கள்

சொல்லுவாங்க. ஆனா கடைசியில் இதை எல்லாத்தையும் ஒண்ணா கலந்து ஒரு வடிவ கோப்பையில் போட்டு எடுத்தா உங்களுக்கு கேத்தேட் பிஸ்கட் தயார். நா என்ன சொல்றேன்னு உங்களுக்கு புரிகிறதா, பெரிய பிஸ்கட், அப்படியே அதை வைத்திடவேண்டும், ஏதோ விளையாட்டு இல்ல, ஒரு பெரிய பிஸ்கட். அதை அப்படியே அவன்ல வச்சு பேக் பண்ணிடலாம். இப்ப அதை வெளியில் எடுத்தா. எல்லா கலவைகளும் ஒன்றாகிவிட்டதா? ஓ! ஆமா! நீங்க கிரேக்கா இருந்தா, அதனுடைய அளவுகள் மாறுபட்டதாக இருப்பதை பார்க்க முடியும். அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்திருப்பது மட்டும் அல்ல, அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கிறது. அவை ஒன்றோடு ஒன்று கலந்து பேக் ஆகியிருக்கு. என்னை பொறுத்தவரை பவுல் என்ன சொல்கிறார் என்றால், என்னுடைய பப்பா கண்ணோட்டப்படி, நாம எல்லாரும் இயேசுவின் பிஸ்கட்டுகளாக இருக்கிறோம். இயேசு நம்முடைய வாழ்க்கையோடு பின்னி பிணைந்திருக்கிறார்.

ஆனா, இங்க ஒரு பிரச்சனை வருது வசனம் 6. “நான் இனி பாவத்துக்கு” அதாவது இது அனுபவத்தை பற்றி கூறுகிறது. அதை நாம் தொடர்ந்து துரிதமாக பார்த்திடலாம், “நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூர சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.: - நம்முடைய சரீரத்தை அவர்  எப்படி சொல்கிறார் என்பது சுவாரஸ்யமாக இருக்கிறது - “”பாவ சரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக.”

இதன் மொழிபெயர்ப்பு ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது. சிலர் நாசமாகிட என்கின்றனர். சரி, இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். அந்த வார்த்தை காடர்ஜியோ - காடா, கீழே, அர்ஜெயோ, வெறுமையாய், நிதானமாக நிறுத்தப்படுதல்.

நான் வளர்ந்து வந்த நாட்களில் இரண்டு கொடுமையான கார்கள் தயாரிக்கப்பட்டது என நினைக்கிறேன். எட்சல் இல்லை, அது இன்னும் மோசமானது, அது ஒரு ஸ்டூட்பேகர் மாதிரி இருந்துச்சு. ஸ்டூட்பேகர் ஞாபகம் இருக்குதா? அது புல்லட் மாதிரி இருக்கும். அதாவது, அதுல பல ராகங்கள் இருக்கிறது, முன்னாடி எங்க இருக்கு, பின்னாடி எங்க இருக்கு? எங்க அப்பாக்கு தெரிந்தெடுக்க எந்த வாய்ப்பும் கிடைக்கல, ஏன்னா எங்ககிட்ட நிறைய பணம் இல்லை, அதனால எது இருந்துச்சோ அதை தான் வாங்க வேண்டியிருந்தது. நாங்க மஞ்சள் நிறமுடையதை வாங்கினோம். அப்ப நான் சின்ன பையனா இருந்தேன், “அப்பா, மஞ்சள் ஸ்டூட்பேகர வாங்க வேண்டான்னு சொன்னேன்.” அப்பெல்லாம் டிரைவே அல்லது கேரேஜ் எல்லாம் இல்லை, அதனால யார்ட்ல நிறுத்த அவரால முடியல. “இல்ல, இல்ல, இல்ல, டாட், இரண்டு வீடுகள் தள்ளி தான் நிறுத்திடலாம் என்றேன். அதுவரைக்கும் நடந்து போவோம். எங்களுடையது தான் அது என்பதை மற்றவர்களுக்கு தெரிய வேண்டான்னு நினைத்தோம்.”

அப்பறம், ஒருநாள் நா அதுல ஏறி என்ன சொன்னே தெரியுமா, அதாவது, “அப்பதா நா இத ஓட்டி பழக போரேன்னு சொன்னே.” அதற்கு

பிறகு, அதாவது, அப்பெல்லாம் ஆடோமேடிக் ஷிபிட் கிடையாது. அப்பெல்லாம் நேராத ஓட்ட முடியும் இல்லைன்னா பைசைக்கிள் ஓட்டிடலாம். இதுல நா ஏறிட்டேன், அதை ஸ்டார்ட் பண்ணினேன். உங்களுக்கு அந்த அனுபவம் இருந்தா தெரியும், பலருக்கு அது தெரிந்திருக்கும், நூற்றல போட்டு கீற போட்டு கிளட்ச அமுக்காம அதையெல்லாம் மறந்துட்டு, அப்படியே ஸ்டார்ட் பண்ண முயலுவோம் அப்படி செய்யும் போது ஜர்க் ஆகி கழுத்துல அடிபடும். அது, மட்டுமில்ல, அப்பதா தோனனும் , ஓ, மறந்துட்டேன். கடைசியா கிளட்ச அமுத்தி எடுக்க கத்துகிட்டேன் கடைசியில கேஸ் பெடலையும் அமுக்கி 20 அடி முன்னாடி எடுக்க கத்துகிட்டேன். அதுக்கு மேல என்னால போக முடியல ஏன்னா எங்க தோட்டத்துக்கு பின்னால சுவர் இருந்துச்சு அதை தாண்டி போனா நா அவ்வளவுதான். அதனால இருபது அடி மட்டும் முன்னால போவேன், இருபது அடி பின்னால வருவேன், முன்னால பின்னால. அது மட்டும் விஷயம் இல்ல, என்னோட டிரைவிங் லைசன்ச நா வாங்கினபோது, எனக்கு பதினேழு வயசு, அப்ப நா 20,000 மைல் போயிருப்பேன்னு நினைக்கிறேன், 20 அடிகள் முன்னாடி, 20 அடி பின்னால.

ஆனா இதுல எனக்கு தெரிந்த விஷயம் என்னன்னா, நா அதை நூட்ரல்ல போட்டேன்னா, இல்ல கிளட்சை அமுகிநாளோ, இல்ல காஸ் பெடலையும் அதோட சேர்த்து அமுக்கிநாளோ நல்லா சத்தம் போடும், அதாவது பவர் கார்ட் சத்தம்போட ஆரம்பிக்கும். எப்படி இருந்தாலும்,

அது காருக்கு எந்த வித்தியாசத்தையும் உண்டாக்காது, ஏன்னா அது கிளத்சோட தொடர்புடையதாக இல்லை. கிறிஸ்து நம்முடைய வாழ்வில் வரும்போது நம்முடைய வாழ்வும் தொடர்பை இழக்கிறது, என்ன சொல்றேன்னா, பாவத்தின் வல்லமை துண்டிக்கபடுகிறது, அவர் நம் வாழ்வில் வரும்போது இதுதான் நடக்கும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இன்னொரு கதையும் இருக்கிறதல்லவா, உங்களுக்கு மீன் பிடிப்பது வேட்டையாடுவதும் ரொம்ப பிடிக்கும், நீங்களே தனியா அந்த பயங்கரமான நதியில படகோட்டீட்டு போவீங்கதானம், அதை பற்றி இவர்களுக்கும் கொஞ்சம் சொல்லுன்மக.

**பார்பர்:** சரி, அந்த நதி என்னை மேற்கொள்ள துவங்கியது என்னால முன்னேறி வர முடியல. அதனுடைய தாக்கம் அதிகமா இருக்கு.

**ஆன்கர்பெர்க்:** அப்ப நீங்க படகுல இருந்து விளுந்துட்டீங்க.

**பார்பர்:** அந்த படகில் இருந்து தவறிவிட்டேன். உண்மையில், தேவனுடைய கிருபையினால் மட்டுமே என்னால மீண்டு வர முடிஞ்சுது, ஆனா அந்த நதியின் தாக்கம் அதிகமா இருந்ததை உணர்ந்தேன். அது ரொம்ப அதிகமா இருந்துச்சு. அந்த நதியில் அந்த நேரத்தில் இருந்தது பெரிய தவறாக இருந்தது. அது புயல் வர நேரமா இருந்துச்சு, அது சரியான நேரமாக எனக்கு தோன்றவே இல்லை. ஆனா ஒரு கட்டத்துல ஒரு மரக்கிளையை பிடித்து கொண்டேன் அதன் உதவியோடு கரை வரைக்கும் நீந்து வந்துட்டேன். நம்மால முடியுன்னு

நம்ம நினைக்கும்போது நமக்கு நடக்கிற விஷயம் இதுதான்னு நினைக்கிறேன். நாம் மாம்சத்தின் தாக்கத்தினால் தடுக்கப்படுகிறோம் அந்த மாம்சம் நம்மை கீழே தள்ள முயல்கிறது இறுதியில் அதினால் சோர்வடைந்து விடுகிறோம். உதாரணமாக, சிலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள், “இல்ல, நா தை நம்பமாட்டேன், வேயின். உங்களால அதை சமாளிக்க முடியும் என்பார்கள்.”நிஜமாவா? தேவன் கிறிஸ்து சபையை நேசிக்கிறது போல கணவன் மனைவியை நேசிக்க வேண்டும் என்கிறார். யாராவது எதிர்கிறீங்களா? என்னுடைய கையை நா உயர்த்தல. தேவன் எதிர்பார்க்கிற அனைத்தையும் நாம் செய்யும்படியாக அவர் நமக்குள் இருந்து நம்மை பெலப்படுத்துகிறார். அதுதான் நற்செய்தி. அதுதான் சுவிசேஷத்தின் அழகும் கூட. அது இரட்சிப்போடு நின்றுவிடவில்லை. துவக்கம் இதுதான். கிறிஸ்து நமக்குள் வந்து வாசம் பண்ணுகிறார். அவர் தான் நமது நித்திய ஜீவன். அவர் நமது ஜீவன். அதை தான் ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியாக தான் அவரை பெற்றுகொண்டீர்கள், அதே மாதிரிதான் நடக்க வேண்டும். அவரை நம்ப வேண்டும், மாம்சத்தை நம்பாமல் இருங்கள், ஏன்னென்றால் அது உங்களை கீழ தள்ளிடும். அதினால் நீங்கள் வீழ்ச்சி அடைவது உறுதி.

**ஆன்கர்பெர்க்:** அந்த வசனத்தின் அடுத்த பகுதி என்ன?

**பார்பர்:** இங்கு, அவர் சொல்லுகிறார், "நாம் இனி பாவத்திற்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக." இதுதான் இங்கிருக்கிற முழு பிரச்சனை. நாம் அடிமைகள், நம்முடைய தெரிந்தெடுப்பு இல்லை ஆதியிலிருந்தே அப்படிதான். கிறிஸ்துவிற்கு சரி என்று நாம் சொல்ல தவறும்போது, நாம் அந்த கட்டத்தில் பாவத்திற்கு அடிமையாக தான் இருக்கிறோம். சுயம் உள்ளே நுழைகிறது. பாவம் என்கிற ஆங்கில பதத்திற்கு இடையில் வருகிற ஐ என்ற எழுத்து. அதோடு பெருமை என்ற ஆங்கில வார்த்தையின் நாடு எழுத்தும் ஐ தான். அந்த நிலைக்கு நா வந்துட்டேன்னா நிச்சயம் அழிவு உண்டாகிடும்.

**ஆன்கர்பெர்க்:** வேயின், இதை பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லுங்க நாம இரட்சிக்கப்பட்ட போது, கிறிஸ்து நம்மை நூற்றல்ல நிறுத்துகிறார். இல்லைன்னா நம்ம ஓடிட்டே இருந்திருப்போம், நம்முடைய வாஞ்சை நம்முடைய இச்சை நம்முடைய விருப்பம் என்றிருந்திருப்போம், சரியா. அதன் மீது நமக்கு வல்லமை இல்லை. ஆனால் அவர் நம்மை நடுநிலையில் நிறுத்தினால் அதனால் நமக்கு முன்பாக தெரிந்தெடுப்புகளை வைத்திருக்கிறார். அவர் நம்மை அந்த நதியிலிருந்து தூக்கிவிட்டார். அந்த நதி இன்னும் சீறிக்கொண்டே இருகிறது. பின்னாடி காலடி எடுத்து வைத்தாலும், பூம், மறுபடியும் உள்ள போயிடுறோம். அதை பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா.

**பார்பர்:** ஓகே, அதாவது, பவுல் நாம் இதை புரிந்துகொள்ளும் விதமாக கலாத்தியர் 5:16ல் கூறியிருக்கிறார், “ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்.” இப்ப, இது ஒரு தெரிந்தெடுப்பு. இதுதான் நாம் எடுக்க வேண்டிய தீர்மானம். இதன் படிதான் நடக்க வேண்டும் என்கிறார். ஆவியானது தேவ வார்த்தையின்படி கிரியை செய்கிறது. அதனால் கிறிஸ்துவுக்கு நாம் நம்மை ஒப்புகொடுக்கும்போது, அவருடைய வார்த்தைக்கு இனங்கும்போது, நாம் ஆவியில் நடக்கிறவர்களாக இருப்போம், மேலும் அவர், “மாம்ச இச்சைகளை நிறைவேற்றாதிருப்பீர்கள் என்றும் கூறுகிறார்.” ஆ ஓ! நமக்கு இன்னும் மாம்சத்தின் விருப்பங்கள் இருக்கத்தான் செய்கிறது. அவர் விசுவாசிகளிடம் பேசிக்கொண்டிருக்கிறார், விடுபட்ட நபர்களிடம் அவர் பேசவில்லை. மேலும் அவர் சொல்கிறார், “ மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டும் என்று இருக்கிரவைகளை செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. இது நிகழ்கால தன்மையில் தான் சொல்லப்பட்டு இருக்கிறது, “உங்களுக்கு விருப்பமானவைகளை மட்டுமே செய்துகொண்டு இருக்கிறீர்கள். வேறுவிதமாக சொன்னால், இது முட்டு சந்து போலிருக்கிறது. என்னுடைய வாழ்க்கையில் வேயின்க்கு மேல கிறிஸ்துவை நிறுத்தும்போது, அவர் என்னவெல்லாம் நம்மிடம் வேண்டுகிராரோ, அதை என் வாழ்வில் நான் செய்வதற்கு அவர் என்னை

பெலப்படுத்திடுவார். இதுல பிரச்சனை என்னன்னா, மாம்சத்தின் இச்சைகள் எவ்வளவு ஆபத்தானது என்பதை நம்மில் பலர் இன்னும் புரிந்துகொள்ளாமலே இருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** இதை பற்றி இன்னும் அதிகமாக அடுத்த வாரமும் பேசிட இருக்கிறோம். ஆனாலும் அடிப்படை விஷயங்களை செயல்படுத்த துவங்குவது நல்லது என்று நினைக்கிறேன். சில கிறிஸ்தவர்கள் இப்படி சொல்வார்கள், “நா ரொம்ப அதிகமா பாவம் செய்துட்டேன், இது சாத்தியமா இருக்குன்னு எனக்கு தோனல.” இருந்தாலும் அவங்க கிறிஸ்துவை உண்மையா நம்புகிறார்கள், சரியா. அவர்களுக்கு இந்த மாதிரியான வாழ்க்கை இல்லை என்பதை நினைத்து வெட்கப்படுகிறார்கள். நீங்க உங்க வார்த்தைகளால அவங்களை ஊக்குவியுங்கள், இதை கவனி, தேவன் உன்னில் அதிகப்படியான விருப்பத்தை உண்டாக்க வேண்டும் என ஜெபித்திடு, ஒரு குறிப்பிட்ட தலைப்பில் ஒரு வசனத்தை காட்டும்படி தேவனிடத்தில் கேளுங்கள், பிறகு அவர் உங்களை மாற்றும்படி அவரை நோக்கி வேண்டுதல் செய்திடுங்கள். ஏன்னா உங்களுடைய எண்ணம் எல்லாம், நம்மை மாற்றிக்கொள்ள முடியாது என்பதாக இருக்கிறது. இதை கிறிஸ்து செய்ய வேண்டிய வேலை. அவர் ஆயத்தமாக இருக்கிறார், ஆனால் நாமதா அதை கேட்கனும்.

**பார்பர்:** நிச்சயமாக.

**ஆன்கர்பெர்க்:** இன்னும் என்ன சொல்ல விரும்புறீங்க?

**பார்பர்:** சரி, ஒரு விஷயத்தை நான், சொல்லவேண்டும் என விரும்புகிறேன். என்னால எது முடியாதுன்னு தெரிந்துகொள்ள நா விருப்பம் காட்டலைன்னா, இப்படிதான் இருக்கும், ஏன்னா இதுல தான் எனக்கு பிரச்சனை உண்டாகிறது. பல விஷயங்களை நம்மால செய்ய முடியுன்னு நினைக்கிறோம், அப்பதா தேவன் எனக்கு இதை வெளிப்படுத்தி காட்டினார். சபை ஆராதனை முடித்து நா வீட்டிற்கு வரும்போதும் அந்த நேரம் எனக்கு நல்ல அருமையான நேரமா இருந்தது, அப்ப எனக்கு முன்னால முன்தீட்டு ஒருவர் வேகமா போயிட்டு இருந்தாங்க. அதாவது, இவங்க எங்கிருந்து வண்டி ஓட்ட கத்துக்கிட்டாங்க யார் இவங்களுக்கு லைசன்ஸ் கொடுத்தது, எப்படி பட்ட ஆளுங்களா இருப்பாங்கன்னு தோனுச்சு. நா அவனாக பின்னாடி வேகமா போக ஆரம்பிச்சேன். அப்ப தா யோசித்தேன், "ஒரு நிமிஷம், இந்த எண்ணம் எங்கிருந்து வந்துச்சு? கிறிஸ்துவை பற்றி நினைக்க வேண்டிய கட்டத்தில் நம்மை பற்றி நினைக்க வைக்கும் இந்த மாம்சம் எவ்வளவு வஞ்சனை யுள்ளது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்த வாரம், நேயர்களே, என நம்புகிறேன். தவறாமல் பார்ப்பீர்கள் நம்முடைய தலைப்பு என்னவென்றால், "நம்முடைய மாம்சம் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறது." நம்முடைய மாம்சம் பாவத்திற்கு அடிமையாக

இருக்கிறது, ஆனால் கிறிஸ்து நமக்கு ஜெயத்தின் பாதையை காண்பித்து இருக்கிறார். அவரே நம்முடைய வெற்றி. வேதம் சொல்கிறதை எப்படி அப்பியாசப்படுத்த வேண்டும் என்று நமக்கு தெரியாமல் இருக்கிறது. இதை பற்றி வேதம் என்ன சொல்கிறது என்பதை பற்றி வேயின் நமக்கு நிச்சயமாக சொல்லிகொடுக்க இருக்கிறார். உங்களிடம் ஒரு கேள்வியை வைக்கிறேன்: உங்க கிறிஸ்தவ வாழ்வில் நீங்கள் திருப்தியடைந்திருக்கிறீர்களா, அல்லது உங்களிடம் இருக்க கூடாத சில குணங்கள் காரியங்கள் இருப்பதை உணர்ந்திருக்கிறீர்களா, நீங்க ரொம்ப நாலா முயற்சித்து கொண்டே இருக்கலாம், இருந்தாலும் எதையும் மேற்கொண்டு வரமுடியல, கிறிஸ்து விரும்புகிற ஒரு வாழ்க்கையை இதுவரைக்கும் நீங்க வாழவே இல்லை, இப்ப விட்டுவிடலாம் என்கிற கட்டத்தில் இருக்கிறீர்களா? அடுத்த வாரம், நிகழ்ச்சியை காண தவறாதீர்கள். கிறிஸ்து தேவனுடைய வார்த்தையில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை சொல்ல இருக்கிறோம்.தவறாமல் பாருங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.